காயர் பித்- பிற தென்னை நார் தொழில் நிறுவனங்களின் கோரிக்கையைப் பரிசீலிக்க

# உயர்மட்ட நிபுணர் குழு அமைக்கப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 30-

காயர் பித் மற்றும் பிற தென்னைநார் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைக்க உயர்மட்ட நிபுணர் குழு அமைக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு :-

காயர் பித் மற்றும் பிற தென்னை நார் சம்பந்தப்பட்ட தொழில்களை வெள்ளை வகையிலிருந்து ஆரஞ்சு வகையாக மறுவகைப்படுத்தியது தொடர்பாக பல்வேறு தென்னை நார் தொழில் சார்ந்த சங்கங்களின் கோரிக்கைகள் அரசுக்கு பெறப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள தென்னை சார் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியிலும் நீடித்த நிலைத்தன்மையினை உறுதி செய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு 'தமிழ் நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்' என்ற நிறுவனம் ஒன்றினை துவக்கி மதிப்புக் கூட்டப்பட்டுள்ள பொருட்கள் உற்பத்தியினை அதிகரிக்கவும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் நம் மாநிலத்தில் உள்ள தென்னை விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படும்.

தமிழ் நாட்டில் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை நார் மற்றும் காயர் பித் உள்ளிட்ட தென்னை சார் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. பெருமளவில் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதுடன் மொத்தத்தில்

சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற வேலை வாய்ப்புகளை வழங்கி வரும் இந்நிறுவனங்களின் கோரிக்கையை தமிழ் நாடு அரசு மிகுந்த கனிவுடன் பரிசீலித்து வருகிறது.

இந்நிலையில் இந்த கோரிக்கை குறித்து அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து, இப்பொருள் குறித்து விரிவாக ஆராய்ந்து, அரசுக்கு பரிந்துரைக்க உயர்மட்ட நிபுணர் குழுவை அமைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இம்முயற்சி சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையிலும் அதே சமயம் இந்நிறுவனங்கள் நிலைத்தன்மையுடன் இயங்கிடவும் வழி வகுக்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எழும்பூரில் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில்

# ரூ.16 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட விளையாட்டரங்கம்!

## கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 30-

மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் ரூ.16 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம், ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.7.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங் கத்தில் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம் (Upgraded Hockey Stadium), ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் (Olympic Standard New Synthetic Turf) மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் (Kalaignar Centenary Pavilion) ஆகியவற்றை திறந்து வைத்தார்.

7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023" போட்டி ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை சென்னையில் நடைபெறவுள்ளது. 16 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் மீண்டும் நடைபெறுகின்ற இப்போட்டியை ஹாக்கி இந்தியாவுடன் இணைந்து தமிழ்நாடு அரசு நடத்த உள்ளது. இப்போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய 6 நாடுகளின் அணிகள் பங்கேற்கின்றன.

"ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023" போட்டியினை சிறப்பாக நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் 17.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் போட்டியினை சிறப்பான முறையில் நடத்துவதற்காக 12 கோடி ரூபாய் நிதியினை ஹாக்கி இந்தியா நிர்வாகிகளிடம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கினார்.

மேலும், சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாக நடத்தும் வகையில், 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் 2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் தரத்திலான முதன்மை ஹாக்கி செயற்கை இழை ஆடுகளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை இழை ஆடுகளம் மற்றும் இணைப்பு பணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தினர்கள் அமருவதற்கான பார்வையாளர் மாடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளி வசதிகள், நவீன கழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புப் பணிகள் முடிவுற்ற நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் மேம்படுத்தப்பட்ட ஹாக்கி விளையாட்டரங்கம், ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் ஆகியவற்றை திறந்து வைத்து பார்வையிட்டார்.

முன்னதாக, "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023" போட்டியின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, த. வேலு, ஜோசப் சாமுவேல், எம்.கே. மோகன், ஏ.எம்.வி. பிரபாகரராஜா, ஜே.ஜே. எபினேசர், ஆர்.டி. சேகர், துணை மேயர் மு. மகேஷ்குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் குமார் திர்கி, பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இந்திய ஹாக்கி அணி தேர்வாளர் முகமது ரியாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வில்லிவாக்கம் ஒன்றியம் – அயப்பாக்கம் ஊராட்சியில்

# ரூ.6.99 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் - சாலை விரிவாக்கப் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் முன்னிலையில் டி.ஆர்.பாலு எம்.பி. தொடங்கி வைத்தார்!

*திருவள்ளூர், ஜூலை 30-*

*திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம், அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில், ரூ.6.99 கோடி மதிப்பீட்டில், டி. என்.எச்.பி., பேரறிஞர் அண்ணா சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சாலை விரிவாக்கப் பணியை, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு அவர்கள் தொடங்கி வைத்தார்.*

*இது பற்றிய விவரம் வருமாறு:-*

*நேற்று முன்தினம் (28.7.2023), திருவள்ளூர் மாவட்டம், வில்லிவாக்கம் ஒன்றியம் அயப்பாக்கம் முதல் நிலை ஊராட்சியில், ரூ.6.99 கோடி மதிப்பீட்டில், டி.என்.எச்.பி., பேரறிஞர் அண்ணா சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சாலை விரிவாக்கப் பணியை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்கள் தொடங்கி வைத்தார்.*

*27.08.2021 அன்று சட்டப் பேரவையில், "10,000 கி.மீ நீள ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள் படிப்படியாக, மாவட்ட இதரச் சாலைகளாக, தரம் உயர்த்தப்படும். முதற்கட்டமாக சுமார் 2000 கி.மீ. நீளச் சாலைகள், நடப்பாண்டில் தரம் உயர்த்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.*

*முதற்கட்டமாக, 2000 கி.மீ. நீளமுள்ள 873 ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகளை, ரூ.2,178 கோடி மதிப்பீட்டில், தரம் உயர்த்த, 18.11.2022ல் அரசாணை வெளியிடப்பட்டது.*

*தற்போது, திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், அயப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சாலையின் மொத்த நீளம் 2.80 கி.மீ. ஆகும்.*

*இச்சாலையானது, திருவேற்காடு - அம்பத்தூர் சாலையில் துவங்கி, ஆவடி மாநகர சாலையின் வழியாக, தேசிய நெடுஞ்சாலை 205ல் இணைகிறது. இச்சாலையை, இரு வழிச்சாலையாக தரம் உயர்த்தி, 800 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகாலுடன் கூடிய சாலையாக மேம்படுத்தப்பட உள்ளது.*

*மேலும், மழைநீர் கடந்து செல்லும் வகையில், மூன்று இடங்களில் சிறுபாலங்களும் அமைக்கப்படுகிறது. இச்சாலையை தரம் உயர்த்துவதன் மூலம், அன்னனூர் இரயில்வே நிலையம் மற்றும் திருமுல்லைவாயல் இரயில் நிலையங்களுக்குச் செல்லும் போக்குவரத்து நெரிசல் குறையும்.*

*தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, கடலோர காவல் படை குடியிருப்பு, ஒன்றிய அரசின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் துறை அலுவலகம், தேசிய பரவு நோயியல் நிறுவனம் (ஐ.சி.எம்.ஆர்) ஆகிய பகுதிகள் பயன் பெறும். தமிழ்நாட்டில் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை, அரசு சாலைகளாக தரம் உயர்த்திடும், கிராமச் சாலைகள் திட்டத்தினை, 1.7.1972இல் முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்தார்.*

*மக்கள் தொகை 1500க்கும்மேல் உள்ள 3,902 கிராமங்களையும், மக்கள் தொகை 1000க்கும்மேல் உள்ள 2,943 கிராமங்களையும், தார் சாலையாக தரம் உயர்த்தி, அரசு சாலைகளாக மாற்றியமைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை, மாவட்ட இதர சாலையாக தரம் உயர்த்திட ஆணையிட்டார். இந்த ஆணையின் விளைவாகவே, தற்போது அயப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட, இச்சாலை நெடுஞ்சாலைத் துறை மூலம் மேம்படுத்தப் படுகிறது என்று, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தெரிவித்தார்கள்.*

*இந்நிகழ்ச்சியில், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், தலைமைப் பொறியாளர் எம்.முருகேசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

அண்ணாமலை நடை பயணத்தால்

# எந்த விதமான மாற்றமும் ஏற்படப்போவது கிடையாது!

## அமைச்சர் எஸ்.ரகுபதி கிண்டல்!



*புதுக்கோட்டை ஜூலை 30-*

*புதுக்கோட்டை ராணியார் அரசு பெண்கள் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யும் பணி முகாம் நடைபெற்றது. இந்த முகாமை சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேரடியாக முகாமிற்குச் சென்று பார்வையிட்டு எவ்வாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படுகிறது எவ்வளவு விண்ணப்பங்கள் இது வரையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து முகாமில் இருந்தவர்களிடம் கேட்டு அறிந்து ஆய்வு செய்தார்.*

*இந்த ஆய்வில் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா உள்ளிட்ட அரசு அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.*

*இந்த ஆய்வுக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த சட்டத் துறை அமைச்சர் எஸ் ரகுபதி பேசுகையில்:- அண்ணாமலை எவ்வளவு ஊழல் பட்டியல் வெளியிட்டாலும் அந்தப் பட்டியல் தி.மு.க.வை எந்த விதத்திலும் பாதிக்காது. அண்ணாமலை நடை பயணத்தால் எந்த விதமான மாற்றமும் ஏற்படப்போவது கிடையாது.*

*ராகுல் காந்தி நடை பயணத்தில் எழுச்சி இருந்தது அண்ணாமலை நடை பயணம் என்பது அவருக்கு கால் வலி தான் மிச்சமாகும்.*

*இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி கிண்டல் செய்து பேசினார்.*

திருவாரூர் மாவட்ட பகுத்தறிவு ஆசிரியரணி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள்!

*திருவாரூர், ஜூலை 30-*

*திருவாரூர் மாவட்ட பகுத்தறிவு பேரவை ஆசிரியரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டுவிழா தெருமுனைப் பிரச்சாரம் திருவாரூரில் நடைபெறுகிறது. தி.க., மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், தலைமைக் கழக பேச்சாளர்கள் இந்த பிரச்சாரத்தில் பங்கேற்கின்றனர்.*

*கலைஞர் நூற்றாண்டு விழா தமிழ்நாடெங்கும் எழுச்சியோடு நடைபெற்று வரும் நிலையில் திருவாரூர் மாவட்ட பகுத்தறிவு பேரவை ஆசிரியரணி சார்பில் நடைபெறும் தெருமுனை பிரச்சாரம் நாளை (31.07.2023) மாலை திருவாரூர் வாழ்வாய்க்கால் பாலத்தில் தொடங்குகிறது.*

*திராவிடர் கழக தலைமைக்கழக செயலாளர் சு. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட தலைவர் அரங்க ஈ.வெ.ரா., மாநில விவசாய அணிச் செயலாளர் வீரையயன், நகர தலைவர் சுரேஷ், மாநில அமைப்பாளர் இரா. சிவகுமார், நகரச் செயலாளர் ஆறுமுகம், மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, நகர அமைப்பாளர் சிவராமன், மாவட்ட துணைத் தலைவர் அருண்காந்தி, இளைஞரணி துணை அமைப்பாளர் நாத்திக. பொன்முடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மாவட்ட தலைவர் வீ. மோகன் அறிமுக உரையாற்றுகிறார்.*

*திருவாரூர் நகர பகுதிகளில் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறும் இந்த பிரச்சார கூட்டங்களில் தி.மு.க. மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி, தி.மு.க. நிர்வாகிகளான ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள்,நகர செயலாளர் வரை எஸ்.பிரகாஷ், நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில் ஆகியோர் பங்கேற்கின்றனர்.*

நாகை-திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த

# மூன்று கோவில்களுக்குச் சொந்தமான ரூ.11.28 கோடி மதிப்பிலான நிலம் மீட்பு!

## இந்து சமய அறநிலையத்துறை நடவடிக்கை!

*சென்னை, ஜூலை 30-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் பகட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று முன்தினம் (28.07.2023) நாகப்பட்டினம், திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த 3 திருக்கோயில்களுக்கு சொந்த மான ரூ.11.28 கோடி மதிப்பீட்டிலான நிலங்கள் மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.*

*நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை வட்டம், சித்தாய்மூர், அருள்மிகு சுவர்ணதாபனேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமாக திருத்துறைப் பூண்டி வட்டம், தில்லைவிளாகம் கிராமத்தில் 23.88 ஏக்கர் புன்செய் நிலம் மற்றும் 2.33 ஏக்கர் நன்செய் நிலம் உள்ளன. புன்செய் நிலத்தில் 16 தனிநபர்கள் வீடுகள் கட்டியும், நன்செய் நிலத்தினை தனிநபர் ஒருவரும் ஆக்கிரமித்திருந்தனர். இந்நிலையில் நாகப்பட்டினம் மண்டல இணை ஆணையர் வி.குமரேசன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட உதவி ஆணையர் திருமதி ப.ராணி ஆகியோர் முன்னிலையில் வருவாய் துறை அலுவலர்களின் உதவியுடன் இன்று திருக்கோயில் நிலங்கள் மீட்கப்பட்டு "HRCE" என்ற பெயர் பொறிக்கப்பட்ட எல்லைக்கற்கள் நட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.8.28 கோடியாகும்.*

*மேலும், திருப்பூர் மாவட்டம், தாராபுரம், அருள்மிகு காடு அனுமந்தராயர் சுவாமி திருக் கோயிலுக்குச் சொந்தமான 10.98 ஏக்கர் நிலம் மற்றும் அதன் உபக்கோயிலான கோனாபுரம், லட்சுமி நாராயணசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 2.14 ஏக்கர் நிலம் தனிநபர் பெயரில் பட்டா பெற்றிருப்பதை அறிந்து திருப்பூர் மாவட்ட வருவாய் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் திருக்கோயில்களுக்கு சாதகமாக பட்டா மாற்றம் செய்து தீர்ப்பு வழங்கப்பட்டது.*

*அதனடிப்படையில் திருப்பூர் மண்டல இணை ஆணையரின் அறிவுரையின்படி, திருப்பூர் மாவட்ட உதவி ஆணையர் திருமதி ஜெயதேவி அவர்கள் முன்னிலையில், காவல்துறை மற்றும் வருவாய்துறை உதவியோடு திருக்கோயில்களின் நிலம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய மதிப்பு ரூ. 3 கோடி ஆகும். ஆக மொத்தம் இன்றைய தினம் மீட்கப்பட்ட 3 திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலத்தின் மதிப்பு ரூ.11.28 கோடியாகும்.*

*இந்நிகழ்வுகளின்போது தனி வட்டாட்சியர்கள் (ஆலய நிலங்கள்) பி.எம். அமுதா, சு.மகேஸ்வரன், திருக்கோயில் செயல் அலுவலர்கள் திருமதி மா.தனலட்சுமி, திருமதி தி.மல்லிகா, சிறப்பு பணி அலுவலர்கள், ஆய்வாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.*



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி 1012 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் திட்ட இயக்குநர் மனிஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், முதன்மை கல்வி அலுவலர் குழந்தைராஜன், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் சசிகுமார் ப.க.பழனிசாமி, சுப்பிரமணியம், தண்டபாணி, மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் கஸ்தூரி, பள்ளி தலைமையாசிரியர் சுகந்தி, மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நேதாஜி மைதானத்தில், 7 வது ஆசிய கோப்பை ஆண்கள் ஹாக்கி போட்டிக்கான கோப்பை திருப்பூர் மாவட்டத்திற்கு வருகை தந்ததையொட்டி பொதுமக்கள் பார்வைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் அறிமுகம் செய்து வைத்து மரக்கன்றுகளை வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகரக் கழகச் செயலாளர் ந.தினேஷ்குமார், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், நகரக் கழகச் செயலாளர் செ.வேலுசாமி, நகர்மன்றத்தலைவர் எம்.மத்தீன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டுக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.